1991 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சட்டமன்றத்திற்கு பேசுங்கள். நேரம் ஆகிவிட்டது.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் எங்களுடைய பகுதியில் வசிக்கின்ற மலை வாழ் மக்களுக்காகவும், ஆதி திராவிட மக்களுக்காகவும் இங்கே ஒரு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் தண்டராம்பட்டு நகரத்தில் ஆதி திராவிட நல விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை சொல்வதற்கு காரணம் புரட்சித் தலைவர் காலத்தில் ஒரு ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் இடையில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை ரத்து செய்து ஒரு பழி வாங்குகின்ற எண்ணத்தோடு நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் வாரிசு என்று இன்றைக்கு நாங்கள் எல்லாம் கருதிக் கொண்டு இருக்கிற எங்களுடைய ஒப்பற்ற தலைவி, ஒரே தலைவி தானைத் தலைவியினுடைய ஆட்சி இந்த மாமன்றத்தில் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

புரட்சித் தலைவரை பழி வாங்குகின்ற விதத்தில் எந்த எந்த திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்ததோ உடனடியாக, அந்த ரத்தை, நம்முடைய அரசு ரத்து செய்து, என்னுடைய தண்டராம்பட்டு நகரத்தில் மீண்டும் ஆதி திராவிட நல விடுதி ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பு அளித்த தலைவருக்கும், என்னை பேசுவதற்கு ஆளாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

4. அறிவிப்பு

பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு.

இன்று மாலை நடைபெறுகிற பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு சரியாக 4.00 மணிக்குத் தொடங்கும். இன்று தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் ''சட்டமன்றமும் அரசு நிர்வாகமும்'' என்பது பற்றியும், முன்னாள் நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்கள் ''சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற பல்வேறு உரிமைகள்'' பற்றியும் பேச இருக்கிறார்கள். சரியாக 4.00 மணிக்கு ஆரம்பித்து 6.00 மணிக்கு முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 7

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 9—9—1991 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

22. தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—11—1987 ஆம் நாளிட்ட 1672 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

23. எள், முந்திரி, நெல், மிளகாய், நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவற்றினை பொறுத்தவரை இளையாங்குடி அங்காடிப் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள வருவாய் கிராமங்களை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து 25—11—1989 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

24. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 14–8–1990 ஆம் நாளிட்ட 886 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

25. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராயக் கடைகள் (தள்ளுபடி செய்தல் மற்றும் திருப்பியளித்தலுக்கான சிறப்பு முன்னேற்பாடுகள்) விதிகளை இயற்றுவது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25–9–1990 ஆம் நாளிட்ட 916 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]